# வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்
# இலங்கை மத்திய வங்கி

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2018ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

---

## உள்முக முதலீட்டுக் கணக்குகள் மீது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்புரைகள்

2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளின் கீழ் விடுவிக்கப்பட்ட 2017 நவெம்பர் 20 திகதியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் விடயங்களுக்குட்பட்டு வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் மூலமான முதலீடுகளுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இதன்மூலம் அனுமதி வழங்கப்படுகிறது.

i. வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர் ஒருவரின் உள்முக முதலீட்டுக் கணக்கொன்றில் நிதி வரவு வைக்கப்படுதலானது வதிவற்ற இடைத்தரகர் ஒருவரினால் இலங்கையில் பராமரிக்கப்படும் கணக்கொன்றினூடாக பின்வரும் விதத்தில் வழிப்படுத்தப்படல் வேண்டும் என அனுமதிக்கப்படுகிறது.

   அ. வதிவற்ற இடைத்தரகர் இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட வங்கியொன்றாகவோ அல்லது இலங்கைக்கு வெளியில் நிறுவப்பட்ட அத்தகைய வங்கியொன்றின் கிளையாகவோ இருக்கின்ற சந்தர்ப்பத்தில், மேலே கூறப்பட்ட கணக்கானது வொஸ்ரோ கணக்கொன்றாகவோ அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கொன்றாகவோ இருத்தல் வேண்டும்.

   ஆ. வேறு ஏதேனும் வதிவற்ற இடைத்தரகராக இருக்கும் சந்தர்ப்பத்தில், மேலே கூறப்பட்ட கணக்கானது உள்முக முதலீட்டுக் கணக்காக இருத்தல் வேண்டும்.

ii. மேலே (i)இன் அடிப்படையில் பெறப்பட்ட நிதிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் மூலம் பெறப்பட்ட விற்பனை அல்லது முதிர்ச்சி பெறுவனவுகள் மற்றும் வருவாய்கள் முதலீடு வழிப்படுத்தப்பட்ட அதே விதத்தில் வொஸ்ரோ கணக்கு அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கினூடாக மீளனுப்பப்படலாம்.

iii. வதிவற்ற இடைத்தரகரின் வொஸ்ரோ கணக்கு அல்லது உள்முக முதலீட்டுக் கணக்கிற்கு நிதியிடும் நோக்கத்திற்காக அத்தகைய வதிவற்ற இடைத்தரகர் ஒருவரின் கணக்கினை பேணுவதற்கான எந்தவொரு வசதியினையும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வழங்கக்கூடாது.

iv. வொஸ்ரோ கணக்கு/ உள்முக முதலீட்டுக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்ட மேற்கூறப்பட்ட முதலீடுகளுடன் தொடர்புடைய அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் 2017ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க பணிப்புரையின் பந்தி 6இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்கமைய வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்திற்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

v. அனுமதிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஏற்படுகின்ற கொடுத்து தீர்ப்பனவு, இணைத்தரப்பு போன்ற ஏதேனும் இடர்நேர்வுகளை குறைப்பதற்காக பொருத்தமான வழிமுறைகளை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேற்கொள்ளல் வேண்டும்.

**பணிப்பாளர் – வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**2018 திசெம்பர் 21**